[2017 ஜூலை 14

206—

முகத்துவாரத்தை தூர்வாருதல்

***19788—டாக்டர் ஆர்.டி. அரசு:**

மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், வாயலூர் ஊராட்சி, உய்யாரிகுப்பம் முகத்துவாரத்தைத் தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்படியெல்லாம் உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள். கை தூக்கினீர்கள் என்றால் எனக்குப் புரியும். ஏற்கெனவே உங்களுக்கு நான்கு question–களுக்கு நான் வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) நான்கு துணைக் கேள்விகள் கேட்பதற்கு உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) உங்களுக்கே நான் வாய்ப்புக் கொடுத்துக்கொண்டிருக்க முடியாது. பேசாதவர்களுக்கு, வாய்ப்பு கிடைக்காதவர்களுக்குத்தான் பேச வாய்ப்பு கொடுக்க வேண்டும். (குறுக்கீடு) உட்காருங்கள். இப்படியெல்லாம் வற்புறுத்தாதீர்கள். மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உய்யாரிகுப்பம் கிராமத்தில் சுமார் 70 நாட்டுப் படகுகள் பதிவு செய்யப்பட்டு, கடலில் மீன்பிடித் தொழில் செய்துவருகின்றனர். ஆற்று முகத்துவாரத்தில் மீன்பிடி படகுகளைக் கொண்டு பெருவாரியான மீன்பிடிப்பு நடைபெறுவது இல்லை. மேலும், இந்த ஆற்று முகத்துவாரம் பருவமழை காலத்தில் இயற்கையாகவே ஆற்று வெள்ளத்தில் தானாகவே

2017 ஜூலை 14]

திறந்துகொள்ளும் என்பதால், ஆற்று முகத்துவாரத்தைத் தூர்வார வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் செயல் தலைவர் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். செய்யூர் தொகுதியில், திருக்கழுக்குன்றம் ஒன்றியத்திற்குட்பட்ட புதுப்பட்டினம் ஊராட்சி, உய்யாரிகுப்பம், புதுப்பட்டினம்குப்பம் ஆகிய பகுதிகளில் ஐநூறுக்கும் மேற்பட்ட மீனவ மக்கள் வசித்துவருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மழைக்காலங்களில் முகத்துவாரம் தானாகவே திறந்துகொள்ளும் என்று கூறுகிறார்கள். இந்தக் கருத்து ஏற்புடையதாக இல்லை. மீனவர்களின் நலன் கருதியும், அங்கே முகத்துவாரத்தில் தூர்வாரப்பட்டால் இனப்பெருக்கம் அதிகப்படும் என்பதையும், அவ்வப்போது ஏற்படும் இயற்கைச் சீற்றங்களினால் மீனவர்களுக்கு வாழ்வாதாரமாக விளங்கிக்கொண்டிருக்கிற படகுகள் சிதலமடைகின்றன என்பதையும் கருத்தில்கொண்டு, மேற்கூறிய உய்யாரிகுப்பம் முகத்துவாரம் தூர்வாரப்பட வேண்டிய அவசியத்தை இந்த அவையிலே கோரிக்கையாக வைத்து, இந்த முகத்துவாரத்தைத் தூர்வார மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய மூன்று கருத்துகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துகள். ஏனென்று சொன்னால், பொதுவாகவே முகத்துவாரம் மகப்பேறு மருத்துவமனையாக செயல்படுகின்றது. இனவிருத்தி, குஞ்சு பொரிப்பகம் எல்லாமே முகத்துவாரத்தை ஒட்டியிருக்கின்ற அந்தப் பகுதியில்தான் நடைபெறுகின்றன. ஏனென்று சொன்னால், கடல்நீர் 30* ppt *என்று சொல்வார்கள். அதுவே ஆற்று நீர், உவர்*

நீர் 18 ppt-யிலிருந்து 8 ppt ஆக அப்படியே படிப்படியாகக் குறைகின்ற நிலையில், பொதுவாக மீன் இன உற்பத்தி அந்த 8 ppt-யிலிருந்து 10 ppt-க்குள் நடைபெறுகின்ற காரணத்தினால், அது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்து. இரண்டாவதாக, முகத்துவாரத்தை ஆழப்படுத்தும்போது மீனவர்கள் தங்குதளமாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு ஒரு வழியாக இருக்கும் என்பதை அரசு உணர்ந்திருக்கின்றது. மூன்றாவதாக பொதுவாகவே high tide வரும்போது, கடல் நீர்மட்டம் உயர்ந்து, தாக்கம் ஏற்பட்டு முகத்துவாரம் இருந்தால் நிச்சயமாக அதன் வழியாக அந்த நீர் உள்ளே வருவதன் காரணமாக கடல் அரிப்பிலிருந்து பாதுகாக்கப்படும். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இதை உணர்ந்துதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரை மற்றும் உத்தரவைப் பெற்று, தமிழ்நாட்டில் இருக்கின்ற மொத்த 45 முகத்துவாரங்களையும் நிலைப்படுத்தி, தூர்வாருவதன்மூலம் மீன் இனவிருத்தியும் பெருகும், கடல் அரிப்பும் தடுக்கப்படும், தங்குதளமாக இருக்கும் என்கின்ற அந்த நிலையை உணர்ந்து, 337 கோடி ரூபாய்க்கு estimate தயார் செய்து Green Climate Fund–லிருந்து நிதியை பெறுவதற்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. எனவே, அந்த நிதி வருகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்பெறும் என்கின்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த முன்னாள் முதலமைச்சர் அவர்கள் 24–8–2016 அன்று விதி 110–ன்கீழ் ஓர் அறிக்கையினை வெளியிட்டார்கள். 'நீலம்' மற்றும் 'தானே' புயல்கள் ஏற்பட்டபோது முகத்துவாரங்களில் மணல் மேடுகள் உருவாகி, இயற்கைச் சீற்றங்களால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது என்பதை உணர்ந்து, அந்த முகத்துவாரங்களைத் தூர்வாரி சீரமைக்கும்பட்சத்தில், மீனவர்களின் வாழ்வாதாரம் பெருகும் என்பதால், கடலூர், நாகப்பட்டினம், முதுநகர் பகுதிகளில் இருக்கின்ற முகத்துவாரங்களைத் தூர் வாருவதற்காக 18 கோடியே 30 இலட்சம் ரூபாய்க்கு அனுமதியை அளித்தார்கள். அந்தவகையிலே, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அறிவித்த

2017 ஜூலை 14]

விதியை மாற்றிய விதியினால், புதுப்பட்டினம், உய்யாரிகுப்பம் மீனவர்களின் விதியை மாற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்ததற்கிணங்க, மொத்தமுள்ள 45 இடங்களில், 6 இடங்களில் தற்போது பணிகள் 18 கோடி ரூபாய் செலவில் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. மீதமுள்ள 39 இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளதுபோல இந்தப் பணிகளை மேற்கொள்ள நிதி ஒரு பிரச்சினையாக இருக்கிறது. ஒரே நேரத்திலே 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையில் உள்ள 45 முகத்துவாரங்களைத் தூர்வார வேண்டுமென்றால், மாநில அரசின் நிதியாதாரத்தைக் கொண்டு செய்வது என்பது, ஒரேநேரத்தில் நடக்க முடியாத ஒன்று.*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எனவேதான், ஒரு தொலைநோக்குப் பார்வையோடு, இன்னும் மூன்றாண்டுக் காலத்திற்குள், இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதன்மூலம் நம்முடைய மீனவர்களுடைய வாழ்வாதாரம் பெருகும். நான் சொன்ன அந்தக் கடல் அரிப்பிலிருந்து பாதுகாக்கவும், முகத்துவாரங்களைத் தங்குதளங்களாக ஆழப்படுத்தி மீனவர்கள் பயன்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாகவும், ஒட்டுமொத்தமாகத் தேவைப்படுகின்ற நிதியை consolidate *செய்து,* Green Climate Fund*–லிருந்து நிதியைப் பெறுவதற்கு அனுப்பி வைத்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அச்சப்படத் தேவையில்லை; கவலைப்படத் தேவையில்லை. நிச்சயமாக அவருக்காகவே, பிரத்தியேகமாக, அங்குள்ள முகத்துவாரத்தை எவ்வளவு சீக்கிரம் தூர்வார முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தூர்வார நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்வேளூர் தொகுதியில் வேளாங்கண்ணிக்கும், செருதூர் கிராமத்திற்கும் இடையே கடலிலே கலக்கின்ற வெள்ளை ஆற்றில் அதிகமாக மணல் திட்டுக்கள் குவிந்து 342* fibre boats *மற்றும் 11 விசைப் படகுகளும் முகத்துவாரத்திலிருந்து உள்ளே வந்து, மீன் இறங்குதளத்திற்கு வரமுடியாமல் சிரமப்படுகிறார்கள். அங்குள்ள 250 முதல் 300 மீனவக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பிழைப்பு நடத்துவதற்கே சிரமப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரிய பட்டியலையே வாசித்து, அந்த இடத்திற்கு 40 கோடி ரூபாய் என்று அறிவித்தவுடன் நான் மகிழ்ச்சியாக இருந்தேன். ஆனால், அதற்காக திட்டம்தான் தீட்டப்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள். அவசரம் கருதி, அந்த மீனவ சமுதாய மக்களைக் காப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்த முகத்துவாரத்தைத் தூர்வாரிக் கொடுக்கும்படி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவித்துள்ளவாறு நம்முடைய பழையாறு மீன் பிடி துறைமுகம், வெள்ளாறு ஆறு, கடலூர் மீன்பிடி துறைமுகம், திருமுல்லைவாசல் மீன் இறங்குதளம், நாகூர் மீன் இறங்குதளம், வெற்றாற்றில் உள்ள நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகம் போன்ற ஆறு துறைமுகங்களுக்கு 17 கோடியே 80 இலட்சம் ரூபாயில் திட்டம் தீட்டப்பட்டு செயலாற்றிக் கொண்டு வருகின்றோம்.*

நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, ஒரே வருடத்தில் இந்தப் பணியைச் செய்ய இயலாது. உங்களுக்கு அந்த இடத்தில் பிரச்சினை, மற்றவர்களுக்கு இதேபோன்று பிரச்சினை வேறு இடத்தில் இருக்கும். எனவே, தூர்வாருவதைப் பொறுத்தவரையில்

இயற்கைச் சீற்றங்களிலிருந்து மீனவர்களுடைய நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலே முன்னுரிமை கொடுத்து, பணிகளை எடுத்துச் செய்கின்றோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வின் அடிப்படையிலே, அதற்கு estimate *தயாரிக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு முயற்சி எடுத்து, அந்தப் பணிகளை எவ்வளவு விரைவில் மேற்கொள்ள முடியுமோ அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. எஸ். பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது பூம்புகார் தொகுதிக்குட்பட்ட வானகிரி ஊராட்சியிலே முகத்துவாரத்தைத் தூர்வாரிக் கொடுத்தால், அந்தப் பகுதியில் இருக்கின்ற 150–க்கும் மேற்பட்ட மீனவர்களுடைய* fibre *படகுகள்மூலம் கடலுக்குள் சென்று, அவர்கள் தொழில் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, அதைத் தூர்வாரிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே அதைத் தூர்வாரிக் கொடுத்து, அந்த மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருவார என மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பருவகால பசுமை நல நிதி, அதாவது* Green Climate Fund*–லிருந்து நிதியைப் பெறுவதற்காக, மாநில அரசிடமிருந்து ஒப்புதல் பெற்று, டில்லி வழியாக கொரியாவிற்கு*

அனுப்பப்படவுள்ளது. அந்த நிதி இந்த நிதியாண்டில் வரப்பெறும் என்ற ஒரு நம்பிக்கை இருக்கின்றது. எனவே, நிதி வருகின்றபட்சத்தில், இந்த ஆண்டே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கோரிக்கைகள் அத்தனையும் நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 207, மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில்பாலாஜி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

207—

மாசினைத் தடுத்தல்

***20718—திரு. V. செந்தில்பாலாஜி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி தொகுதி, காகிதபுரத்தில் உள்ள காகித ஆலையிலிருந்து வெளிவரும் சிமென்ட் மற்றும் கரித் துகள்களைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி, காகிதபுரம் பேரூராட்சியில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலை நிறுவனத்திலிருந்து வெளிவரும் சிமென்ட் துகள்கள் மற்றும் கரித் தூள்களை நவீன முறையில் கட்டுப்படுத்த ஆலை நிருவாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு தற்போது நல்ல முறையில் இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில்பாலாஜி அவர்கள்.*